88142331

International Baccalaureate®
Baccalauréat International
Bachillerato Internacional

**TAMIL B – STANDARD LEVEL – PAPER 1**
**TAMOUL B – NIVEAU MOYEN – ÉPREUVE 1**
**TAMIL B – NIVEL MEDIO – PRUEBA 1**

Wednesday 12 November 2014 (morning)
Mercredi 12 novembre 2014 (matin)
Miércoles 12 de noviembre de 2014 (mañana)

1 h 30 m

---

TEXT BOOKLET – INSTRUCTIONS TO CANDIDATES

- Do not open this booklet until instructed to do so.
- This booklet contains all of the texts required for paper 1.
- Answer the questions in the question and answer booklet provided.

LIVRET DE TEXTES – INSTRUCTIONS DESTINÉES AUX CANDIDATS

- N'ouvrez pas ce livret avant d'y être autorisé(e).
- Ce livret contient tous les textes nécessaires à l'épreuve 1.
- Répondez à toutes les questions dans le livret de questions et réponses fourni.

CUADERNO DE TEXTOS – INSTRUCCIONES PARA LOS ALUMNOS

- No abra este cuaderno hasta que se lo autoricen.
- Este cuaderno contiene todos los textos para la prueba 1.
- Conteste todas las preguntas en el cuaderno de preguntas y respuestas.



© International Baccalaureate Organization 2014

Blank page
Page vierge
Página en blanco

பனுவல் A

# கல்வி தரும் காந்தியடிகள் நற்பணிக் கழகம்

❶ கும்பகோணத்தில் கடந்த 36 ஆண்டுகளாக ஏழை மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது காந்தியடிகள் நற்பணிக் கழகம். பண வசதி இல்லை என்ற ஒரே காரணத்துக்காக ஒருவரின் படிப்பு பாதியிலேயே தடைபட்டு விடக்கூடாது. எல்லாருக்கும் கல்வி என்பதைத் தாரக மந்திரமாகக்கொண்டு இவ்வமைப்பு செயற்படுகிறது. இதனைத் தொடங்குவதற்கு மூலாதாரமாக இருந்து 36 ஆண்டுகளாக ஏழைகளுக்கு இலவசமாகக் கல்விச் சேவை புரிந்து வருகிறார் திரு. பாலசுப்ரமணியன். "நாங்கள் ஐந்து பேர் இணைந்து பத்தாம் வகுப்பில் தோல்வியுற்ற மாணவர்களுக்கு, இலவசமாகப் பாடம் கற்பிப்பதற்காக, 1975-ஆம் ஆண்டு "காந்தியடிகள் நற்பணிக் கழகம்" என்ற அமைப்பைத் தொடங்கினோம். முதல் ஆண்டே நாங்கள் பயிற்றுவித்த 50 மாணவர்களும் பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றனர்" என்று விளக்கினார் இக்கழகத்தின் நிறுவனரான பாலசுப்ரமணியன்.

❷ நெசவாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள், வறுமை காரணமாக படிப்பைத் தொடர முடியாமல் பாதியிலேயே விட்டுவிடுவதை அறிந்து, அந்த மாணவர்களைத் தொடர்புகொண்டது கழகம். அந்த மாணவர்களின் வேலை நேரத்திற்கு ஏற்பக் காலை, மாலை இரு வேளைகளிலும் அவர்களுக்குப் பாடம் கற்பித்தனர் கழகத்தார். பல்வேறு காரணங்களுக்காகப் படிப்பைப் பாதியிலேயே கைவிட்ட இளைஞர்கள் பலரும் இதன்வழி வேலை செய்துகொண்டே படிக்கும் வாய்ப்பைத் திரும்பப் பெற்றனர். அதோடு, வாழ்க்கைக்குத் தேவைப்படும் திறன் வகுப்புகளையும் இம்மன்றம் நடத்தி உதவுகிறது.

❸ 2003-ஆம் ஆண்டுவரை வாடகைக் கட்டடத்தில்தான் இக்கழகம் இயங்கி வந்தது. 2003-இல் முன்னாள் மாணவர்களும் பொதுமக்களும் என அனைவரும் ஒன்றுசேர்ந்து நிரந்திரக் கட்டடத்தை கட்டி முடித்தனர். 10-ஆம் வகுப்பு மாணவர்களுக்குக் கற்றுத் தருவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இவர்களின் கல்விச் சேவை, பின்னர் உயர்வகுப்பு மாணவர்களுக்கும் விரிவடைந்துள்ளது. இங்குக் கல்விக்கு மட்டுமல்லாது நீதிபோதனை, ஒழுக்கம், நேரம் தவறாமை ஆகியவற்றையும் இணைத்தே மாணவர்களுக்குச் சொல்லித் தருகிறார்கள். "இங்கு வந்து வகுப்பு நடத்துபவர்கள் அனைவருமே எங்கள் கழகத்தில் படித்த முன்னாள் மாணவர்கள்தான். எனவே அவர்கள் எல்லோருமே எந்தவிதப் பிரதிபலனையும் பாராமல் கல்விச் சேவை புரிகின்றனர். அதுபோல மாணவர்களிடமிருந்து நாங்கள் எந்தக் கட்டணமும் வசூலிப்பதில்லை" என்கிறார் பாலசுப்ரமணியன்.

❹ இந்த அமைப்பைத் தொடங்கும் போது பாலசுப்பிரமணியனுடன் இருந்த நண்பர்கள் அனைவரும் அவரவர் ஊர்களுக்குத் திரும்பிச் சென்றுவிட, இவர் மட்டும் விடாமல் தொடர்ந்து காந்தியடிகள் நற்பணிக் கழகத்தை நடத்தி வருகிறார். வருமானத்துக்காக மளிகைக் கடை நடத்தும் பாலசுப்பிரமணியன் பள்ளியில் படித்தது எட்டாம் வகுப்பு வரைதான். ஆனால், தம் விடாமுயற்சியால் இரண்டு துறைகளில் முதுநிலைப் பட்டங்கள் வரை பெற்றுள்ளார்.

Su. Veeramani, Puthiya Thalaimurai (2013)

பனுவல் B

# இணையவழி வணிகவிற்பனையால் ஏற்படும் ஆபத்துகள்



*[ – X – ]*

❶ இன்று நாம் வாழ்வது இணைய யுகம். இக்காலத்தில் இணையவழி வணிகவிற்பனை (Online Shopping) என்பது நேரிடை விற்பனையைவிடப் பிரபலம். இப்போது அதற்கெனப் பல இணையத்தளங்களும் இயங்கிவருகின்றன. இந்த இணையத்தளங்களின்வழி வீட்டிலிருந்தபடியே விரும்பும் பொருள்களை வாங்குவதைப் பலரும் விரும்புகின்றனர். அண்மைக் காலமாக இணையவழி வணிகவிற்பனை பலமடங்கு அதிகரித்துவிட்டது. இதனால், வாகனச் செலவையும் கூட்ட நெரிசலையும் எளிதில் தவிர்த்துவிட முடியும். மேலும், இந்த இணையத்தளங்களில் இல்லாத பொருள் என்பதே கிடையாது. எல்லாமும் கிடைக்கும்; எந்நேரமும் கிடைக்கும்.

**[ – 10 – ]**

❷ இத்தகைய இணையத்தளங்கள் பற்றிய விளம்பரங்களைத் தொலைக்காட்சிகளிலும் காண முடிகின்றது. இந்த விளம்பரங்கள் மதிப்புமிக்க பல பொருள்களை மலிவு விலைக்கு வாங்கலாம் எனவும் தள்ளுபடி விலையில் பெறலாம் என்றும் தெரிவிக்கின்றன. மேலும், வாங்கிய பொருள் தரத்தில் குறையுடையது என்றாலோ எதிர்பார்த்த அளவுக்கு இல்லை என்றாலோ வாங்கிய விலைக்கே பொருளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் விளம்பரம் செய்கிறார்கள். இதனால், மக்கள் ஈர்க்கப்பட்டுத் தேவைக்கு அதிகமாகவே இத்தகைய விற்பனைப் பரிவர்த்தனையில் ஈடுபடுகிறார்கள்.

**[ – 11 – ]**

❸ இணையவழி வணிகவிற்பனை இப்போது அந்தஸ்தை வெளிக்காட்டும் குறியீடாகிவிட்டது. முதலில் நகரங்களில் மட்டுமே நடைபெற்று வந்த வணிகம் இப்போது கிராமங்களிலும் செயற்படத் தொடங்கிவிட்டது. எல்லா வயதினரும் இத்தகைய விற்பனையில் ஈடுபட்டாலும், இளைய வயதினரே இந்தப் பரிவர்த்தனையில் அதிகம் மூழ்கியுள்ளனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**[ – 12 – ]**

❹ இணையவழி வணிகவிற்பனை அதிக வரவேற்பைப் பெற்றிருந்தாலும், அதற்கு ஈடாகப் புகார்களும் குவிகின்றன என்பது அதிர வைக்கும் உண்மையாகும். பாதிக்கப்பட்டோர் பலரும் இணையத்தளங்களில் தங்கள் வருத்தங்களையும் புகார்களையும் தெரிவித்துள்ளனர். இணையத்தின்வழி வாங்கிய பொருள்கள் உரிய காலத்தில் வந்துகிடைப்பதில்லை என்பதும், அனுப்பப்படும் பொருளும் குறிப்பிட்டபடி தரமானதாக இருப்பதில்லை என்பதுமே பெரும்பாலான புகார் வகைகள் ஆகும்.

**[ – 13 – ]**

❺ இத்தகைய புகார்களுக்கு எந்த நாடும் விதிவிலக்கல்ல. இந்தியாவிலும் எண்ணற்ற புகார்கள் வந்து குவிகின்றன. தரமற்ற பொருள்களை விற்பனை செய்யும் உள்ளூர், வெளியூர் இணையத்தளங்களின் பட்டியலை அடிக்கடி வெளியிட்டு அரசாங்கங்கள் நாட்டுமக்களை எச்சரித்து வருகின்றன; இத்தகைய போலி இணையத்தளங்களுக்கும் தடையும் விதிக்கப்பட்டுள்ளன. மேலும், பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் போலி இணையத்தள உரிமையாளருக்கு எதிராக நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கவும் சட்டத்தில் இடமுண்டு. ஆனால், இவ்வாறு இயங்கும் இணையத்தளங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றது.

❻ இணையவழி வணிகவிற்பனைகளில் பொருள் ரீதியான ஏமாற்றுவேலைகள் **[ – X – ]**. பணம் தொடர்பான கடன் அட்டை மோசடி முதலான பல்வகை முறைகேடுகளும் இப்போது சேர்ந்துள்ளன. இந்த வகை முறைகேடுகள் ஏதுமில்லை என்று **[ – 18 – ]** பாதுகாப்பான இணையத்தளங்களை மட்டுமே சிலர் நாடுகின்றனர். ஆனால், பலரும் முடிந்த மட்டும் இவ்வாறான இணையவழி வணிகவிற்பனைகளை **[ – 19 – ]** வருகின்றனர். பல சமயங்களில் இணையத்தளங்களில் வெளிநாட்டு முகவரி குறிக்கப்பட்டிருக்கும். ஆனால், பெறப்படும் பொருள்கள் வேறு எந்த நாட்டிலிருந்தோ வந்து சேரும். இதுபோன்ற விவரங்களில் மக்கள் **[ – 20 – ]** இருத்தல் அவசியம். எனவே, எந்த இணையத்தளத்தில் பொருள் வாங்க விரும்புகின்றோமோ, அதுபற்றி முழுமையான விவரங்களை **[ – 21 – ]** பிறகே, இத்தகைய பரிவர்த்தனையில் ஈடுபடுதல் பாதுகாப்பாகும்.

❼ இணையவழி வணிகவிற்பனையில் பாதுகாப்புக் கருதி, எவ்வளவுதான் சட்டதிட்டங்களைக் கடுமைப்படுத்தினாலும், மக்களின் உதவியும் ஒத்துழைப்புமின்றி முறைகேடுகளைத் தடுக்கவோ குறைக்கவோ முடியாது. வருமுன் காப்பதே சிறப்பென்பதை உணர்ந்து விழிப்புடன் செயற்படுவோம்.

R.Narayanasamy, *Manjari Magazine* (2012)

**பனுவல் C**

# முதுமை வரையும் கோலம்


❶ மனித வாழ்க்கையில் முதுமை என்பது மரியாதைக்குரிய நிலையாகும். பூமியில் பிறந்தவர்கள் எல்லாரும் முதுமைப் பருவத்தை எய்துவதில்லை. பிஞ்சிலே உதிர்ந்தவர்களும் உண்டு; முதுமை எய்துவதற்கு முன்னரே வாழ்க்கையை முடித்தவர்களும் உண்டு. ஆனால், வாழ்க்கையை நிறைவாக வாழ்பவர்கள் பலரும் முதுமைக் கோலம் ஏற்படுத்தும் கட்டாய மாறுதல்களால் தடுமாறிப் போகிறார்கள். இளமையில் உடல் வலிமையோடு உலா வந்தவர்கள் முதுமையில் தளர்ந்துபோய் முடங்கிக் கிடக்கும் நிலையை எண்ணிக் கவலையுறும்போது வாழும் காலம் நரகமாகிவிடுகிறது.

❷ முதுமையை வாழ்வின் இன்னொரு கட்டம் என்று ஏற்கும் மனப்பக்குவம் எளிதில் வருவதில்லை. இளமையில் குடும்பப் பொறுப்புகள் பலவற்றை ஏற்று, கடமைகளை உடனுக்குடன் நிறைவேற்றியவர்கள் முதுமை என்பது ஓய்வெடுக்கும் காலம் என எண்ணாது தடுமாறுகிறார்கள். இன்றைய சூழலில் நிறையப் பிள்ளைகளைப் பெற்றவர்கள் பலரும் தம் முதுமையில் ஆதரவின்றி அன்பிற்காக ஏங்கித் தவிக்கின்றனர். அவர்களுள் பெரும்பாலோர் முதுமை ஏற்படுத்தும் பலவீனத்தால் வாழ்க்கைச் சஞ்சலங்களைச் சகித்துக்கொண்டு காலத்தைக் கழிக்கின்றனர். இந்தத் தவிப்பே மனரீதியாகவும் உடல்ரீதியாகவும் அவர்களுக்குப் பல பாதிப்புகளை ஏற்படுத்திவிடுகிறது.

❸ பணம் இருந்துவிட்டால் மட்டும் முதுமையில் அமைதியான வாழ்க்கை அமைந்துவிடாது. முதுமையில் நல்ல மனம் படைத்த பிள்ளைகளின் ஆதரவும் அரவணைப்பும் அருமருந்தாகப் பயன் தரும். அத்தகைய அன்புடையோர் இருந்தால் முதுமைப்பருவம் அவ்வளவு சிரமம் மிக்கதாக அமையாது. முதியோரிடம் இயல்பாகவே பிடிவாதக்குணமும் எதற்கெடுத்தாலும் குறை கூறி அறிவுறுத்தும் தன்மையும் குடிகொண்டிருக்கும். இதனால், குடும்பத்தில் அவ்வப்போது சிற்சில சங்கடங்கள் தோன்றத்தான் செய்யும். தமக்குத் தகுந்த மரியாதை கிடைக்காதபோது முதியோர் பொங்கி எழுகின்றனர். நெஞ்சத்தில் வேதனையைச் சுமப்பவர்கள் சஞ்சலப்படும் போதுதான் அடிப்படை மனித உணர்வுகள் வீரியத்துடன் வெளிப்படுகின்றன.

❹ முதுமையின் தேவையறிந்து தொண்டு செய்யும் மனப்பக்குவம் இளம் தலைமுறையினர் பலரிடம் இருப்பதில்லை. எழுந்து நடமாடுவதில் தொடங்கிப் பலவிதத் தேவைகளுக்கும் உதவியை எதிர்பார்க்க வைத்துவிடும் முதுமைக்காலம், உடல்ரீதியாகச் சிலரை மிகவும் பலவீனப்படுத்திவிடுகிறது. இதோடு, உடல்நலக்குறைவும் சேர்ந்து கொள்ளும்போது அது தாங்க முடியாத துயரமாக மாறிவிடுகிறது.

❺ குழந்தைகளுக்கு வரும் சின்னச் சின்ன ஆசைகள் முதியவர்களுக்கும் வருவதுண்டு. அத்தருணத்தில் குழந்தைகளிடம் காணப்படும் மூர்க்கத்தனமும் எதிர்ப்பும் முதியவர்களிடமும் வெளிப்படும். முதியவர்கள் ஆர்ப்பாட்டமின்றி அமைதியாகக் காணப்படுவதால், அவர்கள் உணர்வற்றவர்கள் என்று சிலர் எண்ணிவிடுகிறார்கள். பெரும்பாலும் முதியவர்கள் உணர்வுகளை எளிதில் வெளிப்படுத்த மாட்டார்கள். ஆனால், தம் உணர்வுகளுக்கு அரண் அமைக்கத் தெரியாதபோது அவை ஏக்கங்களாக உருவெடுத்துச் சில தருணங்களில் எரிமலையாய் வெடிக்கின்றன. வலிமையற்ற நிலையிலும் மங்கிப்போன பார்வையிலேயே அருகில் இருப்பவர்களைச் சுட்டெரிக்கும் அளவுக்குக் கோப தாபங்கள் சொல்லாகவும் செயலாகவும் வெளிப்படுத்துவர் முதியோர். தொண்டு மனப்பான்மையோடு சேவை புரிவோர் அன்றி மற்றவர்கள் இச்செயல்களால் எளிதில் எரிச்சலடைவர். இதனால், குடும்பங்களில் பல சங்கடங்கள் உருவாக முதியவர்களே காரணமாய் அமைந்துவிடுகிறார்கள்.



❻ இன்றைய இளைய தலைமுறையினர் முதியோரிடம் பச்சாதாபத்தோடு நடந்துகொள்ள வேண்டும். முதுமையில் அவர்களுக்கு உற்ற துணையாய் நின்று அரவணைத்து வாழ வேண்டும். அதைவிடுத்து அவர்களைப் பேணிக்காக்கும் பொறுப்பை உதாசீனப்படுத்தி, அவர்களை ஒதுக்கி வைப்பதும், வார்த்தைகளால் காயப்படுத்துவதும் நன்றி மறந்த செயலுக்கு ஒப்பாகும். சில குடும்பங்களில் அடிக்கடி ஏற்படும் சச்சரவுகள் உறவு முறிவிற்கே காரணமாய் அமைந்துவிடுகின்றன. முதியோர் பலரும் குடும்பத்தாரை வெறுத்து வீட்டைவிட்டுத் தாமாகவே வெளியேறிப் போகும் அவலங்களும் ஆங்காங்கே நடக்கின்றன. பெரியவர்களைப் பராமரிப்பது தம் சுதந்திரத்தைப் பாதிக்கின்றது என்றெண்ணி அவர்களை முதியோர் இல்லங்களில் சேர்த்துவிடும் மனப்போக்கு இளையத் தம்பதியினர் பலரிடையே காணப்படுகிறது. இந்தச் சுயநலப்போக்கை அவர்கள் கைவிட வேண்டும். அவர்களையும் ஒருநாள் முதுமை பற்றிக்கொள்ளும் என்னும் கசப்பான உண்மையைக் காலம் அவர்களுக்கு உணர்த்தும்.

தமிழ் இலெமுரியா, Tamil Lemuriya (2012)

**பனுவல் D**

# பிள்ளைகளைப் பாதிக்கும் வன்முறைக் காட்சிகள்



❶ தொலைக்காட்சி என்பது நீண்ட காலமாகவே மனிதனை ஈர்க்கும் பொழுதுபோக்குச் சாதனமாக இருந்து வருகிறது. அது நல்ல தகவல் தொடர்புச் சாதனமாகவும் விளங்குகிறது. வீட்டில் இருக்கும் நேரத்தில் பலரும் அதிலேயே அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். இதனால், வீட்டில் இருக்கும் பிள்ளைகளும் எந்த நேரமும் தொலைக்காட்சியில் வரும் நிகழ்ச்சிகளைப் பார்த்தே வளர்கின்றனர்.

❷ இன்று தொலைக்காட்சியில் வரும் படங்கள் பலவும் வன்முறைக் காட்சிகள் கொண்டவையாக இருக்கின்றன. இவை எந்த அளவுக்குப் பிள்ளைகளைப் பாதிக்கின்றன என்னும் உண்மை பலருக்குத் தெரிவதில்லை. சிறு வயதுப் பிள்ளைகள் விரும்பிப் பார்க்கும் கேலிப்படங்களில் வரும் இப்படிப்பட்ட காட்சிகள்கூட அவர்கள் மனத்தில் எதிர்மறையான சிந்தனைகளை விதைக்கின்றன. "நல்லது கெட்டதைப் பகுத்து ஆராய்கின்ற தெளிவு சிறு வயதுப் பிள்ளைகளுக்கு இருப்பதில்லை. மற்றவர்கள் தங்களைத் தாக்கும் முன்னர் அவர்களைத் தாக்கித் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்னும் எண்ணத்தில் அவர்கள் வன்முறையில் ஈடுபடுகிறார்கள்," என்று குழந்தை மனநல நிபுணர்கள் விளக்குகிறார்கள்.

❸ அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பதால் பிள்ளைகளின் கல்வியறிவும் சிந்தனையாற்றலும் தடைபடுகின்றன என்பதும் உண்மையே. இது பிள்ளைகளின் கல்வி கற்கும் ஆர்வத்தை வெகுவாகக் குறைத்துவிடுகின்றன. பொருந்தாத காட்சிகளைத் தொலைக்காட்சியில் பார்த்து வளரும் பிள்ளைகள் பல நிலைகளில் பாதிக்கப்படுகின்றனர். அவை பிள்ளைகளின் மனநலம், பழக்கவழக்கங்கள், பழகுமுறைகள் ஆகியவற்றைப் பாதித்து முறையான வளர்ச்சிநிலைக்குத் தடையாக இருப்பதோடு, எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்திவிடுகின்றன.

❹ வன்முறைக் காட்சிகளைப் பார்க்கும் பிள்ளைகள் அம்மாதிரியான வன்முறைச் செயல்களில் ஈடுபடத் தயங்குவதில்லை. அவர்கள் எல்லாரிடமும் மூர்க்கத்தனமாக நடந்துகொள்ளவும் முனைவார்கள். வீட்டிலும் வெளியிலும் கட்டுப்பாட்டோடு நடந்துகொள்ளத் தவறுவார்கள். சில வேளைகளில் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு ஆர்ப்பாட்டம் செய்யவும் துணிவார்கள். தங்கள் செயல்களையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக்கொள்ள வன்முறையே சிறந்த வழி என்னும் மனப்போக்கையும் தம்முள் வளர்த்துக் கொள்வார்கள். இந்தக் குறைபாடு விரைவில் களையப்படவில்லையானால், இப்பிள்ளைகள் விரும்பத்தகாத பழக்க வழக்கங்களைக் கொண்டு பிரச்சினைக்குரியவர்களாக வளர்வார்கள். இதுவே இளம் குற்றவாளிகள் உருவாவதற்கு முக்கியக் காரணிகளுள் ஒன்றாகவும் கருதப்படுகிறது.

❺ தொலைக்காட்சியில் நல்ல நிகழ்ச்சிகளை மட்டுமே பிள்ளைகளின் பார்வைக்குக் காட்டுவதால் இத்தகைய பிரச்சினைகள் வராதபடி பார்த்துக்கொள்ளலாம். வயதுக்கு ஏற்ற நல்ல நிகழ்ச்சிகளைப் பார்க்கும் பிள்ளைகளின் மொழியறிவு மேம்பட்டு அறிவாற்றல் பெருகுவதற்கும் வழியுண்டு. பெற்றோரும் பிள்ளைகளோடு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்து அவற்றில் வரும் காட்சிகளைப்பற்றிக் பிள்ளைகளுடன் அவ்வப்போது உரையாடுவதும் நன்மை பயக்கும். பிள்ளைகளுக்குப் பக்குவம் வரும்போது, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அனைத்தும் நிஜத்தைப் பிரதிபலிப்பதில்லை என்னும் உண்மையை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

❻ பொதுவில், வேண்டாத நிகழ்ச்சிகளைப் பார்ப்பதையும் அளவுக்கதிகமான நேரத்தையும் தொலைக்காட்சி பார்ப்பதில் செலவழிப்பதையும் பெற்றோர்கள் கட்டுப்படுத்த வேண்டும். அதற்குப் பெற்றோரே நல்ல முன்மாதிரிகளாகத் திகழலாம். இந்தப் பொறுப்பை ஏற்காத பெற்றோர் குழந்தை வளர்ப்பில் பல இடர்ப்பாடுகளைச் சந்திப்பர்.

Nilacharal, http://www.nilacharal.com (2006)

---